# தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு
## (கல்வி அமைச்சு )

## வெற்றிடம்

1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி சட்டத்தால் நிறுவப்பட்ட, தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைகுழுவானது (NASTEC), கல்வி அமைச்சின் கீழ் செயல்படுகிறது.

NASTEC **ஆனது இலங்கை பிரசைகளிடமிருந்து ,கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதவி நிலைகளினை நிரப்புவதற்கான விண்ணப்பங்களினை முன்வைக்கும்படி அழைப்பு விடுக்கின்றது** .

**முகாமைத்துவ உதவியாளர் பதவி** , MA-1-2, (**தொழில்நுட்பம் அல்லாத** ) – 03 **வெற்றிடங்கள்**

**தகைமைகள் :**
அ )க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் ஒரே அமர்வில் ஆறு பாடங்கள் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். இதில் பின்வரும் பாடங்கள் உள்ளடங்கலாக நான்கு பாடங்களில் திறமை சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

i. சிங்களம் /தமிழ்
ii. ஆங்கில மொழி
iii. எண்கணிதம்

**மற்றும்**

**ஆ)** க.பொ.த. உயர்தர தர பரீட்சையில் பொது அறிவு பாடம் அல்லாது மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**வயது:** 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் .

**சம்பள அளவுத்திட்டம் : ரூபாய் .27,910-10X300-7X350-12X600-12X710- 49,080**
**சம்பளத்தின் ஆரம்ப படிநிலை : ரூபாய் .27,910/-**

**ஏனைய நன்மைகள் :**

- வாழ்க்கை படி செலவினம்
- அரசினால் அனுமதிக்கப்பட்ட ஏனைய படிகள்
- ஊழியர் சேமலாப நிதியம் - நிறுவக பங்களிப்பு 12% மற்றும் ஊழியர் பங்களிப்பு 8%
- ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் - 3%

**ஆட்சேர்ப்பு நடைமுறை:** எழுத்து மூலமான போட்டி பரீட்சையில் பெற்றுக்கொண்ட பெறுபேறுகளின் அடிப்படையில் மற்றும்/நியமிப்பதற்கு அதிகாரம் கொண்ட அதிகாரிகளால் நியமிக்கப்பட்ட குழுவினரால் முன்னெடுக்கப்படும் படி முறை இயல்பிலான நேர்காணல் மூலம்.

**பதவிக்கான பிரதான கடமைகள்: மேலதிக விபரங்களுக்கு** www.nastec.gov.lk என்ற இணையத்தளத்தினை நோக்குக.

**எவ்வாறு விண்ணப்பிப்பது**

- விரிவான சுய விபரக்கோவை, தொடர்பு கொள்வதற்கு இரத்த உறவு அல்லாத இருவர் பற்றிய விவரங்கள் மற்றும் சான்றிதழ்களின் நகல்கள் என்பன இணைக்கப்பட்ட விண்ணப்பமானது, பணிப்பாளர் /சிரேட்ட நிறைவேற்று அதிகாரி,தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு, 6 வது தளம் **(Wing D),** செத்சிறிபாய இரண்டாம் கட்டம் , பத்தரமுல்ல என்ற முகவரிக்கு **2024/02/15** ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் . முழுமையடையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன், தகுந்த விண்ணப்பதாரர்களைத் தேர்ந்தெடுப்பதில் இறுதி தீர்மானத்தினை எடுக்கும் அதிகாரத்தை தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு கொண்டுள்ளது. விண்ணப்பங்கள் குறும் பட்டியலிடப்படும் என்பதுடன் அதற்குள் அடங்கும் விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்காணலுக்கு அழைக்கப்படுவார்கள். விண்ணப்பிக்கும் பதவி நிலையானது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிக்கப்படல் வேண்டும்.
- அரச கூட்டுத்தாபனங்கள்,நியதிச் சட்ட சபைகள் மற்றும் அரச நிறுவனங்களில் ஏற்கனவே பணிரிபவர்கள் தமது விண்ணப்பங்களினை தத்தமது நிறுவனத்தலைவரின் ஊடாக சமர்பித்தல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பத்தில் விண்ணப்பதாரி தெரிவு செய்யப்பட்டால் அவர் சேவையிலிருந்து விடுவிக்கப்பட முடியுமா என்பது தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.


பணிப்பாளர் /சிரேட்ட நிறைவேற்று அதிகாரி
தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு
6 **வது தளம்** (Wing D),
செத்சிறிபாய கட்டம் II,
பத்தரமுல்ல
தொலைபேசி :011-2186711
இணையத்தளம் :www.nastec.gov.lk